https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-3 July 2025

Published on 14, July-2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# பட்டினப்பாலை காட்டும் வணிக வீதிகள்

**கு. மாலா**
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்

**முனைவர் ம. பிரகாஷ்**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்
சென்னை 600117

**ஆய்வுச்சுருக்கம்**

சோழநாட்டின், தலைநகராய் விளங்கிய காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்புக்களையும், அந்நாட்டின், அரசனாகிய திருமாவளவன் வென்றிச் சிறப்புக்களையும், உரைக்கும் நூல் பட்டினப்பாலையாகும். இந்நூல், பத்துப்பாட்டுத் தொகுப்பில் ஒன்றாக விளங்கும் அகநூலாகும். இந்நூல், புகார் நகரத்தின் ஒவ்வொரு பகுதியையும் நுணுக்கமாய் அணுகி, உய்த்துணரும்படி அமைக்கப்பட்டுள்ளது. இவற்றுள், வணிக வீதிகள், வணிகர்களின் இயல்பு, வணிக மகளிர் குறித்து நுணுகி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள்**

பட்டினப்பாலை, வணிகவீதி, வணிக மகளிர், ஆவண வீதி, கொடிகள், வணிக மகளிர்

## முன்னுரை

பேரரசாயினும் சிற்றரசாயினும், வணிக வளம் இன்றியமையாதது. வேளாண்வளம் நிறைந்த நாடாயினும், வணிகவளம் அடிப்படைப் பொருளாதாரத்தில் பெரும்பங்கு வகித்தது. பண்டமாற்று தொடங்கி இறக்குமதி, ஏற்றுமதி வரை பல்வேறு முறைகளில் வணிகம் நிகழ்ந்தது. பட்டினப்பாலையின் வழி சோழப் பேரரசின் வணிக வீதிகளைப் பற்றியும், வணிகர்களின் வாழ்வு பற்றியும் விரிவாக அறியலாம்.

## வணிகவீதி

காவிரிப்பூம்பட்டினத்தின், வணிக வீதிகளில் அமைந்துள்ள, வணிகர் இல்லங்களையும், அவற்றில் வாழும் மகளிர் தோற்றத்தையும், அவர்கள் வழிபாட்டு முறைகளையும் முதலாவதாகக் காண்போம்.

### வணிகர் இல்லங்கள்

வணிகர் வீடுகள் அருகருகே தொடர்ச்சியாய் அமைந்திருக்கும். சிறிய படிகளைக் கொண்ட, உயர்ந்த மாடங்களாய் அவை விளங்கும். அம்மாடங்களை அடைய ஏதுவாக, ஏணிகள் சாத்திய திண்ணைகளை உடையனவாய் அவை விளங்கும். வணிகர் இல்லங்கள் பல கட்டுக்களாய் அமைந்தவை. சிறிய வாயிலையும், பெரிய வாயிலையும், பெரிய இடைகழியையும் உடையவை. அவ்வில்லங்கள், மேகங்களைத் தீண்டும் அளவிற்கு உயர்ந்த மாடங்கள் ஆகும்.

### வணிகர் குல மகளிர்

இம்மாடங்களில் வாழும் வணிக மகளிர், தென்றல் காற்று வீசும் சாளரங்கள் அருகே நின்று,

நகரில் நடைபெறும் விழாக் காட்சி களைக் காண்பர். அவர்கள் சிவந்த அடியையும், செறிந்த குறங்கினையும், உயர்ந்த அணிகலன்களையும், பருத்த அல்குலினையும் மெல்லிய உடையையும் உடையவர். அவர்கள், பவளம் போன்ற நிறத்தையும், மான் போன்ற பார்வையை யும், கிளி போன்ற மெல்லிய மழலையையும், மயில் போன்ற மென்மையையும் உடையவர். மலைப்பக்கத்தில் விளங்கும் காந்தள் பூங்கொத்துக்கள் இணைந்து காணப்படுவது போல, அவர்கள், தொடி அணிந்த கைகளைக் குவித்து, வீதியுலாச் செல்லும் தெய்வங்களை வணங்குவர். வணிக வீதியில் வெறியாடுவத ற்கு உரிய முருகனுக்கும், பிறவி நீக்கத்திற்குத் துணை புரியும் பிற தெய்வங்களுக்கும், விழாக்கள் இடையறாது நடைபெற்ற வண்ணம் இருக்கும். இவ்வீதிகளில் செல்லும் பாடல் மகளிரும், யாழ் முதலிய இசைக் கருவிகளை இசைப்போரும், இவ்வழிபாட்டில் பங்கேற்பர். இத்திருவிழாக்களில், முழவு முழங்கும்; முரசு ஒலிக்கும். காவிரிப்பூம் பட்டினத்து ஆவண வீதிகள், இத்தகைய விழாக்கள் நீங்காதவை. இதனை ஆசிரியர், “விழவறாஅ வியல் ஆவணம்”[1] என்ற சொல்லால் குறிப்பர்.

### பல்வேறு கொடிகள்

புகார் நகர வணிகர் இல்லங்களில் வாழும் மகளிர், இல்உறை தெய்வம் மகிழ்வதற்காகத், தங்கள் இல்லங்களின் முகப்பில் பல கொடிகளைக் கட்டியிருப்பர். கடைத்தெரு வின் இரு புறங்களிலும் வெண்ணிறமான பலகொடிகள் கட்டப்பட்டிருக்கும். ஆற்றின் இரு கரையிலும் வளர்ந்துள்ள, கரும்பின்பூ அசைவது போல, இக்காட்சி விளங்கும். பெருவெள்ளம் வருவதால், வெண் மணலை உடைய காட்டாற்றின் கரையில் இக்கரும்பின் பூக்கள் காணப்படும் இத்தோற்றம் கோல் நட்டு, அதில் கட்டப்பட்ட துகில்கொடி போல் உள்ளது. நெல்லும் அரிசியும் உடைய குதிர்களைத் தாளிட்டிருப்பர். அவற்றைக், கண்ட சர்க்கரை என்ற பாகினால் மெழுகி, அரிசியைப் பலியாகத் தூவி, அவற்றின் மேல், வெண்ணிறக் கொடிகளை நட்டு வைத்திருப்பர். உணவுப்பண்டங்கள் வைக்கப் பட்டுள்ள குதிர்கள் பசும் சாணத்தால் மெழுகப்படுவதும், அவற்றின் மேல் பாக்கு வெற்றிலை போன்ற பொருள்களை உகுத்து வழிபாடு செய்வதும் உண்டு என அறிகின்றோம். இக்குதிர்களின் இருபுறமும் கால்களை நட்டு அதன் மேல் வெண்ணிறக் கொடிகளைப் பறக்க விடுவர். பொருள் களைக் கெடாமல் பாதுகாப்பதையும், பொருள்களை மிகுதியாக விற்பதற்காகச் சேமித்து வைப்பதையும் இக்காட்சி நினைவுபடுத்தும். பல நூல்களைக் கற்றுத் தெளிந்தவர், வாது செய்வதில் வல்லவராய் விளங்கினர். அவர்தம் ஆணையை ஏற்று நடப்போர் பலர் இருந்தனர். தங்கள் சமயக் கருத்துக்களையும், மற்ற கொள்கைகளையும் நிலை நாட்டுவதற்காகச் சொற்போர் செய்வத ற்கு அழைக்கும் இடங்களில் அவர்கள் கொடியை நட்டிருப்பர். சமயவாதிகளும் தருக்கம் அறிந்தவர்களும் தங்கள் கொள்கை களைச் சொற்போரின் மூலம் நிலைநாட்டுவர் என்பது சோழர் காலச் சான்றோர்களின் அறிவாற்றலை உணர்த்துவதாகும். “தொல் ஆணை நல்லாசிரியன்”[2] என்று இப்பெரு மக்கள் குறிக்கப்படுகின்றனர்.

காஞ்சி நகரத்தில், மணிமேகலை சமயக் கணக்கருடன், நாவல் கொம்பை நட்டு, சொற்போர் புரிய அழைத்த செய்தி மணிமேகலைக் காப்பியத்தில் காணப் படுகின்றது.[3]

கட்டுத்தறியை அசைக்கும் யானையைப் போல, கடற்கரையை ஒட்டிய ஆவண வீதியின் ஒரு புறத்தே, மரக்கலங்கள் வரிசை யாக இருக்கும். நாவாய்கள் அலைகளால் அசையும் தோற்றம், “வெளில் இளக்கும் களிறு போல”[4] என்ற உவமையால் சுட்டப் பட்டுள்ளது. அவற்றில், செல்லும் வணிகர் கள், தங்கள், மரக்கலங் களின், பாய் மரத்தின் மேல் உள்ள கூம்பில், கொடி களைக் கட்டி இருப்பர். இக்கொடிகள், கரையிலிருப்போர்க்கும், கடலில் செல்வோர் க்கும் விருப்பத்தைத் தருவதாகும். இதனை ஆசிரியர், “மிசைக்கூம்பின் நசைக் கொடியும்”[5] என்ற தொடரால் குறிப்பர்.

ஆவண வீதிகளில் மணலைப் பரப்பிச் செம்பூக்களைச் சிதறி, மீன்களையும் இறைச்சியையும் அறுத்து, அவற்றின் தசைகளைப் பொரிக்கின்ற, ஆரவாரம் உடைய முற்றத்திலும் கொடிகள் கட்டப்பட்டிருக்கும். கள் உண்பார் பலரும் வந்து, செல்வதற்கு ஏற்றவாறு, கள்ளுக்கடையின் வாயில்கள் அகன்று காணப்படும். அங்குக் கள்ளின் விலையைக் கூறி விற்பவர், தங்கள் கடைகளுக்கு முன்னர், மக்களை அழைப்பதற்காகக் கொடிகளைக் கட்டி வைத்திருப்பர். கள்ளுண்பார்க்குத், தாங்கள் உண்ணும் கள்ளுக்குத் துணையாகப், பொரித்த கறித்துண்டுகளும் கிடைப்பதை இக்காட்சி நினைவூட்டுகின்றது. இவ்வாறு, பெரிய கொடிகளும், சிறிய கொடிகளும், அகன்ற பதாகைகளும், ஆவண வீதியில் நிறைந்து

காணப்படுவதால், ஞாயிற்றின் கதிர்கள் கூடத் தெருவில் நுழையாத அளவுக்கு நிழல் வாய்ந்ததாக, இவ்வீதிகள் விளங்கின. வணிகப் பொருள்களை, விளம்பரம் செய்வதற்காகக், கொடிகள் நாட்டும் வழக்கம் இன்றும் உள்ளது. சிலப்பதிகாரம், மதுரைக்காஞ்சி ஆகிய நூல்களும் வணிக வீதிகளில் பல்வேறு கொடிகள் கட்டப்பட்டிருந்தமையைக் குறிப்பிடுகின்றன. இக்கொடிகள், பல வண்ணங்களிலும் அளவுகளிலும் வேறுபட்டுக் காணப்படும். பதாகை என்பது இரு புறத்தையும் இணைக்கும் பெருங்கொடி ஆகும்.

**வணிகப் பொருட்கள்**

சோழப் பெருநாடு, தன்னிறைவு பெற்று, எல்லா வளங்களையும் கொண்டதாக விளங்கியது. பிற நாடுகளின் வளர்ச்சிக்கும், துணை புரிவதாக அந்நாடு இருந்தது. வணிகர்கள் ஒரு நாட்டில் செல்வம் பெருகுவதற்கும், அதன் பயனை அனைவரும் துய்ப்பதற்கும், கருவியாக விளங்குபவர் ஆவர். அகநாட்டில் விளையும் பொருள் களையும், கடல் கடந்த, பிறநாட்டில் விளையும் பொருள்களையும், அனைவரும் அறிந்து, நுகரத் துணை புரிபவர் இவர்களே. புகார் நகரத்து ஆவண வீதிகளில், நீர்வழி வந்த பொருள்களும், நிலத்தின்வழி வந்த பொருள்களும், குவிந்து கிடக்கும். இவை அனைத்தும் ஒரே இடத்தில் கிடைப்பதற்கு ஏற்றவாறு இவ்வீதிகள் அகன்று விளங்கின. இவற்றின் தரத்தையும் இடத்தையும் அறிவதற்கு, வணிகர்கள் பல விளம்பர உத்திகளைப் பயன்படுத்தினர். அவற்றுள் ஒன்றே கொடி நாட்டுதல் ஆகும். வணிகப் பொருள்கள் தனித்தனியே, தரத்துக்கு ஏற்பப் பிரிக்கப்பட்டு, வாணிகம் செய்யப்பட்டன. இத்தொழிலில் சிறந்தவர்கள், அத்தொழிலின் பெயரால் அறியப்பட்டனர்.

எடுத்துக்காட்டாக, பொன்வாணிகன் நப்பூதனார், பண்டவாணிகன் இளந்தேவனார், அறுவை வாணிகன் இளவேட்டனார், கூல வாணிகன் சீத்தலைச் சாத்தனார் போன்ற பலர், வணிகத்தோடு கவிபாடும் ஆற்றலும் பெற்று விளங்கினர்.

கூவியர், அப்ப வாணிகர், மீன் விலை பகர்நர், உமணர் என்னும் உப்பு வாணிகர், நறவு நொடை நுளைச்சியர் எனப் பல்வேறு வணிகர்கள் இவ்வாவண வீதிகளில் வாழ்ந்தமை மதுரைக்காஞ்சியிலும் குறிப்பிடப் பட்டுள்ளது. மதுரையிலும் புகாரிலும் அல்லங்காடி, நாளங்காடி என்ற இரவிலும் பகலிலும் இயங்கும் இருவகைக் கடைகள் இருந்தன.

அழியாத புகழுடைய தேவர்கள் பாதுகாப்ப தாலும், ஞாயிற்றின் தேரில் பூட்டப்பட்ட குதிரைகளைப் போல காவலர்களின் தளராத முயற்சியாலும், இவ்வணிக வீதியில் உள்ள பொருள்கள், கள்வரால் கவர்ந்து செல்லப்படாமல், பாதுகாப்பாக இருந்தன. வணிகர்களுக்குத் தங்கள் பொருள்களின் காவல் என்பது மிகவும் இன்றியமையாததா கும்.

கடலில் மரக்கலங்கள் மூலம், பிற நாடுகளில் இருந்து, விரைந்து செல்லும் சிறந்த குதிரைகள் கொண்டுவரப்பட்டன. காற்றின் இயக்கத்திற்கு ஏற்ப வந்த மரக் கலங்களில் ஏற்றிவரப்பட்ட, அரிய மிளகுப் பொதிகளும், வணிகவீதிகளில் விற்பனை செய்யப்பட்டன. மேருமலையில் பிறந்த மாணிக்கமணிகளும், சாம்பூநதம் என்னும் ஒருவகைப் பொன்னும், மேற்கு மலையாகிய பொதிய மலையில் பிறந்த சந்தனம், அகில் முதலியனவும், தென் திசைக் கடலில் பிறந்த முத்துக்களும், கீழ்த்திசைக்கடலில் தோன்றிய பவளங்களும், கங்கை ஆற்றின் வளத்தால் உண்டாகிய பொருள்களும், கடாரம் என்ற நாட்டிலிருந்து பெற்ற நுகர் பொருள்களும், சீனம் முதலிய நாடுகளில் இருந்து பெறப் பட்ட கருப்பூரம், பனி நீர், குங்குமம் முதலிய பொருள்களும், இவையே அன்றி மிகப்பெரிய, அரிய பொருள்களும் இவ்வாவண வீதிகளில் விலை கூறி விற்பதற்காகப் பகுத்து வைக்கப் பட்டுள்ளன. இவற்றின் மிகுதி, நிலமகளின் முதுகு நெளியும் படியாக உள்ளது என நூலாசிரியர் குறிப்பிடுகிறார். இப்பொருள்கள், புகார் நகரத்தின் நடுவிலும், கடற்கரைப் பகுதியிலும், பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக் கும். அகன்ற தெருக்களில், செல்வத்தின் எல்லையை மதிப்பிட முடியாத அளவு இப்பொருள்கள் காணப்படும்.

“வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகு”[6] என்ற இத்தொடர், ஆவண வீதிகளின் அகலத்தையும், அங்கிருந்து வணிகப் பொருளை வாங்கிச் செல்வோர், கடந்து செல்வதற்கு ஏற்றவாறு தெருக்கள் உள்ளன என்பதையும், இப்பொருள்களின் மிகுதியும் தரமும் அழகும் காண்போரை மயங்கச் செய்வனவாக இருந்தன என்பதையும், இப்பகுதி உணர்த்தும்.

**வணிகரின் இயல்புகள்**

தொல்காப்பியர், “இரு மூன்று மரபின் ஏனோர் பக்கம்”[7] என வணிகர்களுக்கு உரிய தொழிலாக, ஓதல், வேட்டல், ஈதல், உழவு, நிரை ஓம்பல், வணிகம் ஆகியவற்றைக்

குறிப்பிட்டுள்ளார்.

“வைசியன் பெறுமே வாணிக வாழ்க்கை”[8]

“மெய் தெரி வகையின் எண் வகை
உணவின்
செய்தியும் வரையார் அப் பாலான.”[9] என்ற இருநூற்பாக்களும், வணிகர்களுக்கு உரிய தொழிலையும், அவர்கள் விற்கும் பொருளை யும் குறிப்பிடுகின்றன. வணிகர்கள் விற்கும் எண் வகை உணவுகள், பயறு, உழுந்து, கடுகு, கடலை, எள், கொள், அவரை, துவரை என்பன. இவர்களுக்கும் கண்ணி, தார் ஆகியவை உரியன.

வணிகர்கள் வாழும் பகுதிகளில், மீன்களை வலைவீசிப் பிடிப்பவர் இல்லை. விலங்கு களைக் கொன்று, இறைச்சி விற்பாரும் இல்லை. புகார் நகரத்து ஆவண வீதிகளில் தமக்குப் பகையாக விளங்கும் வலைஞர் களை, மீன்திரள்கள் பகையாகக் கொள்ளுவ தில்லை. விலை கூறி விற்கக்கூடிய இறைச்சி விற்பார் முற்றத்திலும், விலங்குகள் அச்ச மின்றித் திரிந்தன. வணிகர்களின் அறப் பண்பினால், கொலைத் தொழில் இல்லாமையை,

“பகை பேணாது வலைஞர்முன்றில்
மீன்பிறழவும்”[10]

“விலைஞர் குரம்பை மா ஈண்டவும்”[11] என்ற தொடர்கள் புலப்படுத்தும். வணிகர்கள், கள்வர்களைத் தங்கள் தொழில் செய்யாமல் விலக்குவர்; தேவர்களை வழிபடுவர்; வேள்விகளைச் செய்து அத்தீயில் ஆவுதிகளை வழங்குவர்; உழவுத்தொழிலுக்காக எருதுக ளையும், வேள்விக்காகப் பால் வேண்டிப் பசுக்களையும் பாதுகாப்பர். அந்தணர்களு டைய புகழை நிலை நிறுத்துவதற்காகத் தங்களால் இயன்ற முயற்சிகளைச் செய்வர். மிகப்பெரியதும் அரியதும் ஆகிய நற்செயல் களைப் புரிந்து, அவற்றைச் செய்ய இயலாதவர்களுக்குத் தானங்களை வழங்குவர். தங்கள் வயலில் விளைந்த நெல்லையும் பிற நுகர் பொருள்களையும் கொடுப்பர். அரிசி யும் கறியும் கொடுத்து உதவுவர் என்பதைப் “ பசுபதம் கொடுத்து”[12] என்ற தொடரின் பொருளாகவும் கொள்ளலாம். இவ்வணிகர்கள் செய்யும் அறச்செயல்கள், என்றும் தடைப்படுவதில்லை. அவர்கள் அருள் உள்ளத்தோடு வாழ்கின்ற இல்வாழ்க்கை உடையவர்கள்; தூய நெஞ்சம் உடையவர்கள்; வளைந்த மேழியைக் கொண்டு, உழவுத் தொழிலை விரும்பிச் செய்யக்கூடிய மக்களின், நெடுநுகத்தின் நடுவே அமைந்துள்ள பகலாணியைப் போல, பகைவர், நண்பர், நொதுமலர் என்ற வேறுபாடு நோக்காமல் நடுநிலைமையோடு வாழ்கின்ற பண்பினை உடையவர்கள்.

“சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி.” [13]

அமைதலும், ஒரு பால்கோடாமையும் ஆகிய இவ்விரு இயல்புகளை உடைய துலாக்கோல் போல் வணிகர்கள் விளங்கினர். நச்சினார்க் கினியர், இத்தகைய வணிகர்களை, “வேதவணி கன்” என்று குறிப்பர்.

“மெய்ந்நிகர் இல்லாதவன் வேதவணிகன்”[14] என்பது சிந்தாமணி.

“வேதவணிகர் அல்லாதார், கலத்திற் பிரிவு, வேதநெறியன்மையின், ஆராய்ச்சியின்று” என நச்சினார்க்கினியர் இவர்கள் வாழ்க்கையை விளக்குவார்[15]. இவ்வணிகர்கள், தம்முடைய பொருள்களையும் பிறருடைய பொருள்க ளை யும் வேறுபாடின்றி ஆராய்ந்து நோக்கி வாணிகம் செய்வர். தம்முடைய குடிக்குப் பழி வந்துவிடுமோ என்று அஞ்சி, உண்மையைக் கூறி வாணிகம் புரிவர். தான் கொள்ளும் பொருள்களையும் கொடுக்கும் பொருள்களுக்கு மிகையாக கொள்வதில்லை. தான் கொடுக்கும் பொருட்களையும் வாங்கும் பொருள்களுக்குக் குறைவாகக் கொடுப்ப தில்லை. அவற்றின் விலையை, வெளிப்படை யாகச் சொல்லி வணிகம் புரிவர். திருவள்ளுவர்,

“வாணிகம் செய்வதற்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோல் செயின்”[16] என் வணிகரின் நடுவுநிலைப்பண்பைச் சுட்டிக்காட்டுவர்.

பிறவும் தம போல் செய்தலாவது, கொள்வது மிகையும், கொடுப்பது குறையும் ஆகாமல், ஒப்பநாடிச் செய்தல். வணிகர்கள் இப் பண்பினை விரதமாகக் கொண்டவர் என நச்சினார்க்கினியர் விளக்குவர். இப்பண்புகள் வணிகரிடம், மரபுவழி என்றும் காணப் படுவதாகும். நேரிய வழியில், வணிகம் புரிவதால் அவர்கள் செல்வச் செழிப்பு உடையவர்களாக விளங்கினர்.

காவிரிப்பூம்பட்டினத்திற்கு, வணிக நோக்கத் திற்காகவும், இயற்கை வளங்களைக் காண்பதற்காகவும், பல்வேறு இன்பங்களை நுகர்வதற்காகவும், பிறநாட்டு மக்கள் வந்த வண்ணம் இருப்பர். புகார் நகரத்து மக்கள், அவர்களோடு இனிமையாக வேறுபாடு இன்றிப் பழகுவர். அறிவு வாய்த்தலை உடைய சுற்றங்களைக் கொண்ட சான்றோர் கள் தங்கள் ஊரின் நீங்கிப் புகார் நகரில் குடியேறியது போல, பல சாதிகளாய் உயர்ந்த தகுதியை உடைய மக்கள், தாங்கள் உறையும்

நிலத்தைக் கைவிட்டு இங்கு வருவர். இவர்கள் பல மொழிகளைப் பேசுகின்றவர்கள். இவ்வாசிரியர் இம்மக்களை,

"மொழி பல பெருகிய பழி தீர் தேஎத்து
புலம்பெயர் மாக்கள்"[17] என்ற தொடரால் குறிப்பிடுகின்றார். இவர்கள், ஐயறிவே உடையவராதலின் மாக்கள் என்ற சொல்லால் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

"மாவும் மாக்களும் ஐயறிவினவே
மக்கள்தானே ஆறறிவுயிரே"[18] என்பது தொல்காப்பியம்.

பிறமொழி பேசுகின்றவர்கள், கூறும் கருத்துக்கள். ஈண்டு உள்ள மக்களுக்குப் புலனாகாமையால், அவர்கள் மாக்கள் என்ற சொல்லால் குறிக்கப்பெற்றனர்.

இவர்கள் சோனகர், சீனர் முதலியோர். இவர்கள் புகார்நகரத்தில் உள்ள மக்களோடு இனிமையாகப் பழகி, அவர்கள் வாழ்க்கை நெறியோடு தங்களை இணைத்துக் கொண்டு இன்பமாக வாழ்வர். இதனைக் "கலந்து இனிது உறையும் பட்டினம்"[19] என்ற தொடர் புலப்படுத்தும்.

## முடிவுரை

பல வணிச் சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டு, பிறநாடுகளுக்கு எடுத்துக்காட்டாய் விளங்கியது சோழப்பேரரசு. புனல் பரந்து பொன்கொழிக்கும் காவிரி பல சிற்றூர்களைக் கொண்டது. படப்பை, தண்டலை, பொய்கை, ஏரி, அட்டில், பள்ளி, இளமரக்கா, புறச்சேரி ஆகியவற்றைக் கொண்டது. 'பல் பண்டம் பகர்ந்து வீசும்' ஆவணத்தையும், மக்கள் கலந்து இனிது உறையும் தெருக்களையும், நன்நெஞ்சினோர் வாழும் இருக்கைகளையும், இக்காவிரிப்பூம்பட்டினம் கொண்டு விளங்கியது. பட்டினப்பாலை காட்டும் வணிகர் இயல்புகள் தலைமுறைகளுக்கு வழிகாட்டியாக அமையும். ஆவண வீதிகள் எவ்வாறெல்லாம் வணிகத்தை மேம்படுத்தும் வண்ணம் அமைந்திருந்தன என்பதை இக்கட்டுரை வாயிலாக அறியலாம்.

## அடிக்குறிப்பு

1. பட்டினப்பாலை அடி 158
2. பல்கேள்வித் துறை போகிய தொல் ஆணை நல்லாசிரியன் பட்டினப் பாலை 170
3. மணிமேகலை சமயக் கணக்கர்தம் திறம் கேட்ட காதை
4. பட்டினப்பாலை 172
5. பட்டினப்பாலை 175
6. பட்டினப்பாலை 193
7. தொல்காப்பியம், புறத்திணையியல், நூற்பா 74
8. தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல் 78
9. தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல் 79
10. பட்டினப்பாலை அடி 197
11. பட்டினப்பாலை அடி 198
12. பட்டினப்பாலை அடி 203
13. திருக்குறள், அதிகாரம்: நடுவுநிலைமை, குறள் எண்: 118
14. சீவக சிந்தாமணி 1449
15. தொல்காப்பியம் அகத்திணையியல் நூற்பா 11 நச்சினார்க்கினியர் உரை
16. திருக்குறள் நடுவுநிலைமை 120
17. பட்டினப்பாலை அடிகள் 216, 217
18. தொல்காப்பியம் மரபியல்
19. பட்டினப்பாலை அடி 217

## துணைநூற் பட்டியல்

1. உ.வே.சா., பத்துப்பாட்டு மூலமும் மதுரையாசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் உரையும், கபீர் அச்சுக்கூடம், சென்னை, 1956
2. இரா.இராகவையங்கார், பெரும் பாணாற்றுப்படை மூலமும் உரையும், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர், 1958
3. பரிமேலழகர் உரை, திருக்குறள், கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, தியாகராஜ நகர், சென்னை -17.
4. தொல்காப்பியம் பொருளதிகாரம் நச்சினார்க்கினியர் உரை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு, 1965.
5. சீவகசிந்தாமணி இரண்டாம் தொகுதி, வர்த்தமானன் வெளியீடு, 2016.
6. இரா.இராகவையங்கார் பட்டினப் பாலை மூலமும் உரையும், அண்ணா மலைப் பல்கலைக்கழகம், அண்ணா மலை நகர், 1951.
7. மணிமேகலை - உ.வே.சா எழுதிய அரும்பத உரையோடும் பல்வகை ஆராய்ச்சிக் குறிப்புகளோடும், பதிப்பாசிரியர்: எஸ்.கல்யாண சுந்தரையர், வெளியீடு: புரசைவாக்கம் வீனஸ், அச்சுக்கூடம், சென்னை 1949